OS.No.143/2018

Dated : 03.01.2024

Time: 11.45 a.m to 11.50 a.m

P.W-1 சாட்சி ரவீந்திரன் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி சார்பாக குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணை

1) தாவா சொத்து 1ம் வாதி பெயரில் தான் உள்ளது. அவர் கணவர் தான் காலம் சென்ற ராமசாமி. மேற்படி சொத்தை 1ம் வாதி அவருடைய தனிப்பட்ட பெயரில் வாங்கினார் என்றும் அதை அவர் கணவர் வாங்கி வைக்கவில்லை என்றால் அது தவறு. இவ்வழக்கில் 1ம் வாதியை சாட்சியாக விசாரிக்கப்போகிறீர்களா என்றால் இல்லை. வழக்கில் முன்நிறுத்தப்பட்டுள்ள கிரய ஒப்பந்த பத்திரத்தை நான் ஏற்படுத்தி தரவில்லை என்றால் சரியல்ல. அதை 1ம் வாதியும், சங்கர் என்பவரும் தான் அந்த ஒப்பந்தத்தை எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த சங்கர் என்னுடைய தந்தை அவர் காலமாகிவிட்டார்.

2) என்னுடைய சகோதரர் கண்ணன் தற்போதும் உயிருடன் இருக்கிறார். மேற்படி எழுத்து பூர்வமாக என் தகப்பனார் எனக்கு தாவா சொத்து குறித்து ஆவணம் எழுதி வைத்துள்ளாரா என்றால் இல்லை வாய்மொழியாக பாகம் கொடுத்துள்ளார். அவ்வாறு வாய்மொழியாக கொடுத்ததாக சொல்வது செல்லாது என்றால் அது தவறு. என் சகோதரர் கண்ணனை இவ்வழக்கில் விசாரிக்கபோவது இல்லை. 3ம் வாதி என்னுடைய மனைவி. ஏற்கனவே பிரதிவாதிக்கு நானும் என் மனைவியும் காசோலை கொடுத்தது சம்மந்தமாக குற்ற வழக்கு நடந்தது என்றால் சரியல்ல.

(தரப்பினர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/-K.Ananthan**
**Subordinate Judge,**
**Attur.**